[1975 மார்ச் 13

வெட்டாற்றின் குறுக்கே அணை.

*300 வினா—திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நன்னிலம் தாலுகா, வெட்டாற்றின் குறுக்கே ஊர்குடி அருகில் **(Bed-dam)** ஒன்று கட்டி காவனூர் சூரனூர் போன்ற ஏழு கிராமங்களின் நீர்ப்பாசன வசதிகளைச் சீர்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இத் திட்டத்திற்கான செயற்குறிப்பு ஸ்தல அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

திரு. தாழை மு. கருணாநிதி : இது இந்த ஆண்டு நடைமுறைப் படுத்தப்படுமா? அதற்கு அமைச்சர் அவர்கள் உறுதியளிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆய்வு வேலைகள் முடிவுற்றவுடன் மதிப்பீடு தயார் செய்யப்படும் அநேகமாக 1975-76-ல் இந்த வேலை நடைபெறும் என்று நம்புகிறேன்.

Chemical Industries.

***301 Q—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state :**

(*a*) whether it is a fact that the feasibility report has been submitted to Government on running Chemical Industries in Small Scale Sector by Messrs. M. M. Gurunath & Sons ;

(*b*) whether the report has been examined by the Government ; and

(*c*) whether a copy of the report will be placed on the table of the House'

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) and (இ) : ஆம்

(உ) உப்பு, ஜிப்சம், பிட்டர்ன்ஸ் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட சிறுதொழில்கள் வளர்ச்சி குறித்து திருவாளர்கள் எம்.எம். குருநாதன் & சன்ஸ் தயாரித்த தொடக்க திட்ட அறிக்கையின் நகல்கள் சட்டமன்ற பேரவைத்துறை நூலகத்தில் உள்ளன.

திரு. என். கே. பழனிசாமி : சார், அவர்கள் சிபாரிசு செய்த முக்கியமான தொழில்கள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா

The Hon. Thiru S. J. SADIQ PASHA : The developmen t si for the under-mentioned marine chemical industries.—

1975 மார்ச் 13]

1. Freelowing table salt.
2. Dairy Salt.
3. Cattle licks.
4. Soral cement tiles.
5. Potassium schoentie (double sulphate of potassium and magnesium).
6. Hydrated calcium silicate.
7. Light basic magnesium carbonate.
8. Potashalum.
9. Sodium cholarate.
10. Magnesium metal.

இந்த பத்திலே எட்டு கெமிகல்சைப் பொறுத்து அவர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

*302 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில்-மின் சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

வேதாரண்யத்தில் உப்பை மூலப் பொருளாகக் கொண்ட இராசயனப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை கூட்டுத் துறையில் அமைக் கிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேதாரண்யம் பகுதி யில் உப்புத் தொழில் ஏற்படுத்த நிலத்தை தொழில் நுட்ப-பொருளா தார ரீதியில் மேம்படுத்துவது ஆய்விலுள்ளது.

Conference of Agriculture Ministers.

*303 Q. THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether it is a fact that a conference of the State Agriculture Ministers was held in New Delhi in January 1974; and

(*b*) the details of the subjects discussed at the conference?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவர அறிக்கை* ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த ஐந்து சிபார்சுகளில் (setting up of a gobar gas plant) என்று இருக்கிறது. இது இப்பொழுது எந்தெந்த இடங்களில் ஏற்பட்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சரவர்கள் சொல்லுவார்களா?

*384-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.